# பாவலர்
# தெ.அ.துரையப்பாபிள்ளை
# நினைவுப் பேருரை – 2010

## மாணவர் கல்வி மேம்பட
## ஆசிரியர், பெற்றோர் மாணவரிடையே ஒத்துணர்வு

## Rapport among Teachers, Parents and Students for the Upliftment of Students' Learning


வைத்திய நிபுணர்

**தம்பிப்பிள்ளை பேரானந்தராசா,** MBBS,MD(Medicine)

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**



**மகாஜனக் கல்லூரி,**

**தெல்லிப்பழை.**

**24-06-2010**

இன்றைய இப்பெருவிழாவிற்குத் தலைமை தாங்கும் மகாஜனா அதிபர் உள்ளிட்ட அனைத்து உள்ளங்களுக்கும், மாணவ மாணவியர்க்கும் என் அன்பு வணக்கங்கள்.

இன்று ஒரு பொன்னான நாள். இவ்வேளை எங்கள் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்களை நெஞ்சில் நிறுத்தி மேற்கொண்டு செல்வது பொருத்தமும் என் கடமையுமாகும். எங்கள் பாடசாலை உயர் இலட்சியங்களையும், உன்னத விழுமியங்களையும் கொண்டு இன்றும் உயிர்த் துடிப்புடன் விளங்குவதற்குக் காரணம் பாவலரவர்கள் இட்ட அத்திபாரம் என்றால் அது மிகையாகாது. ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வி வழங்கிய நிறுவனங்கள் எமது மதத்தினையும், பண்பாடுகளையும் புறக்கணித்ததையிட்டு மனம் வெதும்பினார். அதேவேளை எமது பாரம்பரிய கல்விமுறை வருங்காலச் சவால் களைச் சந்திக்கப் போதுமானதல்ல என்பதையும் தெளிவாக உணர்ந்து கொண்டார். எனவே, எங்கள் பண்பாடுகளைக் கட்டிக்காக்கும், வளர்த்துச் செல்லும் தரமான கல்வி நிறுவனங்கள் எமது சமுதாய வளர்ச்சிக்கு அவசியம் என்று கருதினார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

அதனால் தான் இத்தகைய மாபெரும் கல்விக்கூடம் எங்கள் சொத்தாக மிளிர்கிறது. "உனை நீ அறி" என்பது அவர் எமக்களித்த பொக்கிசம். மகாஜனாவின் பாரம்பரியம் என்பது அவராலும், அவர் திருமகன் ஜயரத்தினம் அவர்களாலும் உருவாக்கி வளர்க்கப்பட்டு இன்றும் நம் அனைவராலும் போற்றிப் பாதுகாக்கப்படும் ஓர் உன்னத விழுமியம். எமது கல்லூரியின் நேற்றைய, இன்றைய, இனிவரும் சாதனைக்கெல்லாம் வித்து அவர்தான். இன்று இந்த பூமிப்பந்தில் மகாஜனன் இல்லாத இடமில்லை என்னும் அளவிற்கு நாம் விரிந்து பரந்து உயர்ந்து இருக்கிறோம் என்றால் இதைவிட

அவர் பெருமைக்கு வேறேது உரைகல்.

இன்றைய நன்நாளில் எமது பாடசாலையின் நூற்றாண்டு நாளில் அவரின் நினைவுப் பேருரை ஆற்றுவதற்கு என்னை இக்கல்லூரி நிர்வாகம் அழைத்தமைக்கு என் நன்றிகளைக் கூறிக்கொண்டு கடந்த 30 ஆண்டுகளாகப் போரினால் அவஸ்தைப்பட்டு இன்று போர் முடிவடைந்த நிலையில் எம் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சமுதாயம் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, மாணவர்களின் கல்வியை மேம்படுத்த **"ஆசிரியர், மாணவர் பெற்றோர் ஒத்துணர்வு"** (Rapport) என்ற தலைப்பில் என் நினைவுப் பேருரையைத் தொடங்குகின்றேன். இதற்கு எங்கள் பாடசாலையில் எழுந்தருளியுள்ள எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஆனந்தநடராஜப் பெருமானை வணங்கிப் பேருரைக்குள் செல்கிறேன்.

கல்வி என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத்தகைமை என்பவற்றைக் கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். இந்த உலகில் ஒருவர் பெறுகின்ற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனலாம். ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் அடித்தளமாக இருந்து அவரின் ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்ய வழியமைக்க வேண்டும். தரமான கல்வியைப் பெற்றவர்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்களாக, மற்றவர்களை வழிநடத்தும் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும். நுட்பமாகச் செயற்படுகிற கூர்மையான அறிவுடையவராக இருந்து தானும் நடந்து, மற்றவர்களையும் வழிநடத்த வேண்டும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கற்றவர்களைத் தேடிச் சென்று, கல்வி கற்று மக்கள் தங்களை உயர்த்திக் கொண்டார்கள். எழுத்தறிவு, எண்ணறிவு, பட்டறிவு, மருத்துவம், போர்த்திறன்,

கைவேலைத்திறன், இசை, கூத்து, நுண்கலைகள் எனப் பல்வேறு வகைகளில் கற்றுக்கொள்பவருக்குள் நுழையும் கருத்துக்கள் அவருக்குள் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களை மற்றவர் களிடமிருந்து வேறுபடுத்தியது, உயர்த்தியது.

ஆளுபவரின் பிள்ளையாக இருந்தாலும், ஆசிரியருக்கு முன் அவர் ஒரு மாணவர்தான். ஆசிரியருக்குப் பணிவிடை செய்து தான் கற்றுக்கொண்டார். பொருளை விட மதிப்பும் மரியாதையும் மேலெழுந்து நின்றன. மக்களின் வணக்கத்துக்கு உரியவராக ஆசிரியர் இருந்தார். இன்று அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பச் செறிவு, சுருங்கிப் போன உலகம், பொருளாதார வளர்ச்சி போன்ற காரணிகள் கல்வி என்பதற்கான கருத்துக்களை வெகுவாக மாற்றி உள்ளன.

அறிவு நுட்பத்திற்கான அடித்தளமாக இருந்த கல்வி இன்றைய சூழலில் அந்த நிலையிலிருந்து மாறி, பொருள் ஈட்டுகின்ற, வணிகத்திற்கான படிக்கட்டுகளாக மாறி உள்ளது. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு கல்வி வடிவமைக் கப்பட்டு, பொருள் கொள்கின்ற வணிகப் பொருளாக மாற்றப் பட்டுள்ளது. ஆசிரியர்களும் விற்பனையாளராக மாறி அறிவை விற்பனை செய்து பொருளீட்டுகின்றனர். இடைத்தரகர்களும் ஆசிரியர்களைக் கூலிக்கமர்த்தி விளம்பரம் செய்து விற்பனையைக் கூட்டுகின்றனர்.

இன்றைய இந்த நிலை உகந்ததா? பழையன கழிதல் புதியன புகுதல். பழையன எல்லாம் அல்லாதவையும் அல்ல. புதியன அனைத்துமே நல்லனவும் அல்ல. எனவே, அன்றைய வாழ்வில் கல்வி தந்த உயர் கருத்துக்களின் அடிப்படையிலே இன்றைய கல்வி இடம் பெற்றால் நாங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். நல்ல சமூகம் உருவாக அடிப்படைத் தேவை நல்ல கல்வி. இந்த நல்ல கல்வியை ஒவ்வொரு குழந்தையும் பெறக் காரணமாக இருப்பவர்கள்

ஆசிரியர்களும், பெற்றோர்களுமாவர்.

கல்வி இரு பெரும் குழுவினரின் தேவைகளை உள்ளடக்கியது. ஒன்று சமுதாயம். மற்றையது மாணவர். ஒரு சமுதாயம் அதன் வளர்ச்சிக்கு மாணவரின் கல்வி வளர்ச்சியையே எதிர்பார்க்கின்றது. ஒரு சமுதாயம் தனது உயர் கொள்கைகள், பெருமைகள் ஆகியவற்றுக்குள் இளம் பராயத்தினரை உள்வாங்குவதற்கு கல்வி நிலையங்கள் அவசியமாகின்றன. தங்களுக்குத் தேவையான அறிவையும் திறமைகளையும் போதித்து அதன் மூலம் தாங்கள் சமுதாயத்தில் உயர்வு பெற மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்கள் அவசியமாகின்றன. அவர்கள் பெறும் கல்வி அவர்களது சாத்தியமிக்க இலட்சியங்களை அடைய அவர்களுக்கு உதவுவதாக அமைய வேண்டும்.

இந்நிலையில் மாணவர்களினதும் சமுதாயத்தினதும் தேவைகளைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதில் ஆசிரியர்களது பங்கு மிக முக்கியமானதாகும்.

“ஒரு நல்ல ஞானாசிரியனால் தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்” என்பார் சுவாமி விவேகானந்தர். ஆசிரியர்கள் நிறைமொழி மாந்தராக விளங்க வேண்டும். வளர்ச்சியையும் நடத்தையையும் புறம்பேயிருந்து கட்டுப்படுத்தும் பலவித காரணிகளையே நாம் சூழல் என்போம். நமது பண்பாட்டின் மீது பலவிதத் தாக்கங்கள் நிகழ்வதால், பள்ளி, குடும்பச்சூழல் நலிவடைந்துள்ளன. ஒரு குழந்தைக்கு நற்பண்புகளை வளர்க்கும் பொறுப்பில் இச்சூழல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இச்சூழல்கள் பெறும் சீர்கேட்டால் குழந்தையின் வளர்ச்சியும் வாய்ப்பும் தடைப்படுகின்றன. அதனால் மாணவர்கள் நற்பண்புகளைப் பெற்று உயர்வடையும் நற்சூழல்களைப் பள்ளிகளே அமைத்துத்தர வேண்டும்.

குடும்பம், சுற்றுப்புறம், சமுதாயம், பள்ளி, அரசு முதலியனவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் வளர்ச்சி அமைகிறது. குடும்பமும் பள்ளியும் மாணவர்களுக்குத் தக்க சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்கும் போதே மாணவர்கள் உயர்வடைய முடியும். ஒரு குழந்தையின் பண்பு, அதன் குடும்பத்தின் பண்பு, அதன் சமூகத்தின் பண்பு.

J.F.Brown எனும் அறிஞர் "ஒரு நாட்டின் பெருமை, அதன் பரப்பு, மலைகள், காடுகள் கழகங்கள், ஆயுதச்சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றைப் பொறுத்ததன்று. ஆனால், அது அந்நாட்டின் பள்ளிகளின் நிலையையும் ஆசிரியர்களின் தன்மையையும் பொறுத்ததாகும்" என்பார்.

ஆசிரியர் திறம்படக் கற்பிக்கவும் மாணவர்கள் செம்மையுறக் கற்றிடவும் வகுப்பறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிலவும் நல்லிணக்கச் சூழலே ஆசிரியர் மாணவர் உறவு எனலாம்.

பண்டைக்காலத்தில் கல்வி வாழ்வோடு கற்பிக்கப்பட்டு வந்தது. செய்து கற்றல், செப்பன கற்றல், வாழ்ந்து கற்றல், வாழக்கற்றல் என்பதற்கு இணங்க கல்வி கற்றல் என்பது வாழ்வோடு இரண்டறக்கலந்து இருந்தது. அன்றைய கல்வி முறையில் ஆசிரியரும் மாணவனும் தந்தை மகன் உறவு என்ற நிலையில் ஒழுகினர்.

இன்று ஆசிரிய மாணவ உறவு குறைந்து வருகிறது. இதற்குத் தகவல் தொடர்பு சாதனங்களின் ஆளுமையும் ஒரு காரணம். இத்தகைய சூழலில் மாணவர்கள் அயல் மொழிப் பண்பாட்டுக் கலாசாரத்தால் ஈர்க்கப்பட்டு நமது பண்பாட்டை மறக்கின்றார்கள். இன்றைய நிலையில் ஆசிரியர் மாணவர் உறவு மேம்பட பின்வரும் வழிகளை மேற்கொள்ளலாம்.

## 1. அன்பு

அன்பே உலகில் வலிமையானது. இயந்திர கதியில் இயங்கும் இன்றைய சூழலில் பள்ளி வரும் மாணவர்கள் உண்மையான அன்புக்காக ஏங்குகின்றனர். பெற்றோர் இருவரும் பணிபுரிபவராயின் அக்குழந்தைக்கு இருவரது அன்பும் கிட்டாது போய்விட வாய்ப்புள்ளது. பள்ளிக்கு வரும் மாணவனிடத்தில் ஆசிரியர் பரிவன்புடன் இருக்க வேண்டும். மாணவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டி அன்பு வழியில் திருத்த வேண்டும். ஆசிரியர் தன் மீது அன்பு காட்டுகிறார் என்பதை உணரும் ஒரு மாணவன் நல் வழியில் செல்வான்.

## 2. அறிவுத்திறன்

அறிவுத்திறன் குறைந்த மாணவர்களை ஆசிரியர்கள் உற்சாகப்படுத்த வேண்டும். அறிவுத்திறன் குறைந்தவர்களுக்கும் அறிவு புகட்டி அவர்களை உயர்வடையச் செய்வதே நல்லாசிரியர் கடமை. அறிவுத்திறன் குறைந்த மாணவர்களை மற்றவர்கள் முன்பு தரக்குறைவாக நடத்துதல் கூடாது.

## 3. மாணவர்கள் ஆசிரியர் உறவு

மாணவர்கள் ஆசிரியர் இருவரும் நல்லுறவு பேண ஆசிரியர்கள் மாணவர்களது இன்பம், துன்பம் இரண்டிலும் பங்கு கொள்ளல் அவசியம். மாணவர்கள் உடல் சோர்வோ, மனச்சோர்வோ அடையும் போது அவர்களுக்கு ஊன்று கோலாக அமைந்து அவர்கள் நலம் நாட வேண்டும். அவர்கள் வெற்றி பெறும் போது அவர்களைப் பாராட்டி அவர்களது வெற்றியில் பங்கு கொண்டு மகிழ வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு விளங்கி, அவர்களது கல்வித்துறைசார் நாட்டங்களை அடையாளம் கண்டு, அவர்களது திறமைகளை வளர்க்க ஊக்கம் கொடுத்து, அவர்கள் குறைகளை நீக்க அவர்களோடு சேர்ந்து உழைக்க வேண்டும். அகல்

விளக்கெனினும் தூண்டுகோல் வேண்டும். ஒவ்வொரு மாணவனிடத்திலும் ஒரு திறமை மறைந்திருக்கும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சமமான வாய்ப்புக்கொடுத்து ஊக்குவித்தால் அவர்கள் திறன்கள் வெளிப்படும்.

தவறு செய்தல் மனித இயல்பு. பல்வேறு சூழல்களிலிருந்து மாணவர்கள் வருவதால் வகுப்பிலும் பள்ளி வளாகத்திலும் தவறுகள் செய்ய வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு தவறுகள் மாணவர் செய்யும் போது அவர்கள் அதை உணரும் வண்ணம் செய்து திருத்துதல் வேண்டும். அவர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டி மற்றவர்களுக்கு முன் விமர்சித்தலானது இருவரது உறவிலும் தீய விளைவுகளை ஏற்படுத்தும். மாணவர்கள் தவறுகளை உணர்ந்து மீண்டும் அது போன்ற தவறுகளைச் செய்யாதவாறு அன்புடன் வழி நடத்தல் நலம் பயக்கும்.

முன்பெல்லாம் ஒரு வகுப்பில் அளவுடனேயே மாணவர்கள் இருந்தனர். அதனால் அனைத்து மாணவர்களையும் நன்கு கவனித்துக் கல்வியுடன் பண்பாட்டையும் அவர்களுக்கு ஆசிரியர்கள் போதித்தனர். இன்றோ ஆசிரியர் மாணவர் அளவு விகிதம் அதிகம். இன்று ஒரு வகுப்பில் குறைந்தது ஐம்பது மாணவர்கள் உள்ளனர். இவர்கள் பல்வேறு சூழல்களில் இருந்து வருவதால் பல்வேறுபட்ட மனநிலைகளில் உள்ளனர். ஆசிரியர்களும் அனைவரையும் நன்கு கவனிக்க இயலாமல் ஆகிறது. மாணவர்களுக்கு உரிய காலத்தில் பாடத்திட்டத்தை முடிக்க இயலாமல் மாணவர்கள் பல்வேறு வழிகளை நாடுகின்றனர். இதனால் ஆசிரிய மாணவர் நல்லுறவில் விரிசல் ஏற்படுகிறது. மாறாக ஆசிரியர் மாணவர் சரியான அளவில் இருந்தால் ஆசிரியர்களிடம் மாணவர்கள் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகரித்து உறவும் மேம்படும்.

நாள்தோறும் புதிய செய்திகளையும், கருத்துக்களையும் கூறும் ஆசிரியர்களை மாணவர்கள் அனைவரும் விரும்புவர். தாம்

உணர்ந்ததை மாணவருக்குக் கற்பிக்கும் திறம் உடையவராக ஆசிரியர்கள் விளங்குதல் வேண்டும். இவ்வாறான மேம்பட்ட கற்பித்தல் திறனும், மாணவர்கள் அனைவரையும் இன, மத, மொழி வேறுபாடு பாராது சமமாக நடத்துவதும் ஆசிரிய மாணவர் நல் உறவை வளர்க்கும்.

இனி மாணவர்கள் நன் மாணவர்களாக, பெற்றோர் ஆசிரியர்களிடையே நல் உறவு வேண்டும். இவர்களின் நல் உறவு மாணவர் கல்விச் சூழ்நிலைச் சீர்கேடுகளை அகற்ற உதவும். ஒரு குழந்தைக்கு சிறந்த முதல் ஆசிரியர்கள் பெற்றோர்களே ஆவர். எனவே அடிப்படைப் பண்புகளை பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தல் வேண்டும். குடும்பச்சூழல் அமைவாக இருந்து பெற்றோர்கள் தங்கள் இடையே சண்டை சச்சரவு இன்றி (குழந்தைகள் முன்னால்) ஒழுகும் பொழுது குழந்தைகள் மனதில் பெற்றோர்கள் குறித்த நன்மதிப்பு ஏற்படும். நல்ல அன்புடனும், பாசத்துடனும் வளர்க்கப்படும் குழந்தைகள் நல்ல பண்பாளர்களாக உருவாகின்றனர்.

பெற்றோர்கள் குழந்தைகளைத் தனித்துச் செயற்பட விடுதல் வேண்டும். அவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கலாம். தங்கள் விருப்பு வெறுப்புக்களை குழந்தைகள் மீது திணித்தல் கூடாது. பெற்றோர்கள் நல்ல ஆலோசகர்களாக இருத்தல் வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளை ஆணை இடுபவர்களாக இருக்காமல் அன்புடன் அவர்களை வழிநடத்தி வாழ்க்கைப் பாடத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் போது பெற்றோர் பிள்ளைகள் உறவு மேம்படும்.

நற்சூழலை உருவாக்கிக் கொடுத்தல், தம் குழந்தைகள் மீது நம்பிக்கை வைத்தல், பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல், குடும்பப் பிரச்சினைகளை அவர்களுடன் பேசுதல், குழந்தைகளை மற்றக் குழந்தைகளோடு ஒப்பிடாது இருத்தல். இவை எல்லாம்

பெற்றோர்களின் பாரிய பொறுப்புக்களாகும்.

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" எனும் புறநானூறும்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற திருக்குறள் கூறும் கருத்துக்களும் சிந்திப்பதற்கு உரியன.

குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் நேரம் ஒதுக்கி, அவர்களுடன் மகிழ்வோடு உரையாடி, அவர்கள் பிரச்சினைகளைப் பொறுமையோடு கேட்டு அவர்களுக்கு உதவி பாராட்ட வேண்டிய வேளைகளில் பாராட்டி அவர்கள் ஆற்றலை வளர்க்க வேண்டும். சுருங்கக்கூறின்,

1. குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்துக் கண்காணித்தல்.
2. குழந்தைகளுக்குச் செய்தவற்றைச் சொல்லிக் காட்டாமை.
3. குழந்தைகளுக்கு ஆலோசகர்களாக ஆகுதல்.
4. மற்றவர்களோடு ஒப்பிட்டுக் குறை கூறாமை.
5. தவறுகளைப் பெரிது படுத்தாது அன்போடு வழிநடத்தல்.
6. தாய் தந்தையர்கள் தம் மன வேற்றுமைகளைக் குழந்தைகள் முன் காட்டாது ஒழுகுதல்.
7. அன்பு பாசத்துடன் குழந்தைகளை அரவணைத்து வளர்த்தல்.

போன்ற செயல்கள் பெற்றோர் பிள்ளைகள் உறவு மேம்பட ஆக்கமானதாக அமையும்.

இனி சமுதாயக் கூட்டுக்கல்வியானது ஒரு சமுதாயத் தொடர்புடைய கல்வி முறையை வழிப்படுத்துகின்றது. இம்முறை மக்கள் ஒருவரிலிருந்து மற்றொருருவர் தம் சொந்த முயற்சியாலேயே கற்றுக்கொள்வர் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. அறிவு சார்ந்த கல்வி முறைக்கும் அனுபவம் சார்ந்த கல்வி முறைக்கும் இடையே ஒரு பாலம் போல் சமுதாயக் கல்வி முறை அமைகிறது.

நாம் அடிப்படையில் அடுத்தவருடைய பழக்க வழக்கங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். சிறிய குழந்தை தன்னுடைய மூத்த சகோதரனையோ சகோதரியையோ பார்த்துக் கற்றுக் கொள்கிறது. இதைப் போல வாழும் சூழ்நிலையும் நமது பழக்கத்தை மாற்ற எத்தனிக்கிறது. உதாரணமாக புதிதாக சேர்ந்த மாணவன் தன் உடை அணியும் பழக்கத்தை மற்றவர்களைப் போல் மாற்றிக்கொண்டு அந்தக் குழுவில் இடம் பிடிப்பது.

நவீன சமுதாயக் கல்வி முறையில் ஊக்கப்படுத்துதல் அல்லது தண்டனை விதித்தல் ஆகிய இரண்டும் கற்றலில் மறை முகமாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவாகவே அவன் தன் பழக்கங்களை மாற்றிக்கொள்கிறான். ஊக்கம் ஒருவனின் அறிவு சார்ந்து கற்கும் ஆற்றலைத் தூண்டுகிறது. அத்தூண்டுதல் அவன் கற்பதற்கும் அதன் அடிப்படையில் தன் பழக்கங்களை மாற்றிக்கொள்ளவும் வகை செய்கின்றது.

சமுதாயக் கல்வி என்பது, பழக்கங்களின் தன்மை, அறிவு சார்ந்த சில எண்ணங்கள் இவை இரண்டையும் பிரதி பலிக்கின்றது. செயல்படுத்தாமல் கற்றல் (Learning with out performance.) எல்லாநேரத்திலும் நல்ல விளைவைத் தருவதில்லை. இனி, **கவனித்தல்** கற்றலின் முதல் தேவை. இன்றியமையாததும் கூட. ஒரு புதிய விடயத்தைக் கற்கும் போது கூர்ந்து ஒருமுகப்படுத்திய கவனம் வேண்டும்.

மீண்டும் ஒரு பழக்கத்தில் மாற்றம் வலியுறுத்தப்படும் போது மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாகிறது. இதனால் அவர்கள் மனதில் ஒருவித எதிர்பார்ப்புக்களைப் பட்டியல் இடுகிறார்கள். சில பழக்கங்கள் நல்லதையும், சில தீயதையும் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறார்கள். கற்றுக்கொள்கிறவர் எந்தப் பழக்கம் பாராட்டையும், எந்தப் பழக்கம் தண்டனையையும் கொண்டுவரும் என்பதனையும் அவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாட்டையும்

தெரிந்து கொள்ளல் அவசியம்.

1. **விளைவுகளின் விகிதம்** (Reciprocal Causation) ஒரு பழக்கத்தில் வரும் மாற்றம் சுற்றுப்புறச் சூழ்நிலையையும், மனிதனையும் ஒரே சமயத்தில் பாதிக்கக்கூடும். உண்மையில் மனிதன், அவனுடைய பழக்கம், சுற்றுப்புறம் ஆகிய மூன்றும் ஒன்றை ஒன்று பாதிக்கின்றன. உதாரணமாக புகைப்பிடிப்பதை ஒரு மனிதன் குறைத்துக் கொண்டால் மாசினைக் குறைத்து மேலும் மனிதனது நலத்தை இன்னும் அதிகமாகப் பேணுகிறது.

2. **முன்மாதிரிகள் (Model).** பல வகை முன் மாதிரிகள் உண்டு. உதாரணமாக வாழும் ஒரு மனிதனோ இறந்த ஒருவரோ முன்மாதிரியாக தன் பழக்கங்களை வலியுறுத்தலாம். தந்தை சொல் கேட்டு கானகம் சென்ற ஸ்ரீ இராமபிரானைப் போல இருக்க வேண்டும் என்று பிள்ளைகளுக்கு ஸ்ரீ இராமனை உதாரணம் காட்டுவது போல் ஒரு காவிய நாயகன் கூட முன் மாதிரியாகலாம். குழந்தைகளுக்கு உயர் வெற்றி பெற்ற சாதனையாளர்கள், Henry Ford, Thomas Alva Edison, IsacNewton, Wright Brothers போன்ற வெற்றி பெற்ற சாதனையாளர்கள், கம்பர், இளங்கோஅடிகள், திருவள்ளுவர், ஔவையார் போன்ற தீர்க்கதரிசிகள், Doctor இராதாகிருஸ்ணன், Doctor T.M.P.மஹாதேவன், Doctor அப்துல்கலாம், மஹாத்மாகாந்தி, பண்டிதர் நேரு, பாவலர் துரையப்பாபிள்ளை போன்ற எங்கள் காலத்திலே வாழ்ந்த வாழ்கின்ற சான்றோர்களின் வரலாறுகள் எல்லாம் முன்மாதிரியாக்கப்படல் வேண்டும்.

இன்னொரு வகை, குறிப்புக்களால் முன்மாதிரி காட்டுவது (Symbolic). உதாரணமாக தொலைக்காட்சியில் ஒரு நல்ல உபயோகமான பொருளை விளக்கி, அதைப் பயன்படுத்தினால் வளர்ச்சி அடையலாம் என்று குறிப்பிடுவது போலாகும். இதைவிட

மனதிற்கு உகந்த ஒருவர் ஒன்றைச் சொல்லும் போது இன்னும் ஈடுபாடு வரும். நல்ல காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை உணவில் சேர்ப்பது, விட்டமின்களை (Vitamins) புரதங்களை சேர்ப்பது போன்றவற்றை அத்துறைசார் வல்லுநர்கள் எடுத்துச் சொல்லும் போது அதிக நம்பிக்கை ஏற்படும்.

முன்மாதிரிகளைக் கவனித்துக் குழந்தைகள் கற்றுக் கொள்வதால் தான், பெற்றோர் ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே தவறான முன்மாதிரிகள் கெடுதலையும், நல்ல முன்மாதிரிகள் நன்மையையும் தரும் சூழலும் ஏற்படுகிறது. இக்கருத்துக்களை சமுதாயம் மனதிற் கொண்டு குழந்தைகளது கல்வி, அறிவு, ஆற்றல் பெருகி வளர ஒத்துழைக்க வேண்டும்.

கல்வி எனும் செல்வம் உயர்ந்தது. எந்நிலையிலும் வளர வேண்டியது. வளர்க்கப்பட வேண்டியது. Education என்பதற்கு "To Train Out" என்று ஒரு பொருள். அதாவது பயிற்றுவித்தல். கல்வி ஒவ்வொரு தனி மனிதனதும் வாழ்வாதாரம். ஒரு சமூக சீர்திருத்தம். சமுதாயத்தைப் பல்வேறு கோணங்களில் உருவாக்கும் விதை. ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும், சமூக மாற்றத்துக்கும் தூண்டுதலாக உள்ள சக்தி வாய்ந்த ஆயுதம்.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (திருக்குறள்)

என்பது திருவள்ளுவர் வாக்கு. ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வி ஏழு பிறப்பினிலும் அவனைத் தொடர்ந்து சென்று அவனுக்குத் துணை செய்கிறது. இன்றைய விஞ்ஞான அறிவும், நிலைபெற்று விளங்கும் மெய்ஞ்ஞான அறிவும் இதற்குப் பல சான்றுகள் தரும். கல்வி ஒரு குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மா (Physical, Mental, Spiritual) இம் மூன்றின்

சிறப்பானவைகளை ஒட்டு மொத்தமாக வெளிக்கொணரும் என்பது காந்தி அடிகள் வாக்கு.

"ஒரு மனிதனின் குணாதிசயங்களைக் கட்டி எழுப்புவதே உண்மையான கல்வி. அதாவது ஒரு மனிதன் மனோபலத்தை விருத்தி செய்து, புரிந்து கொள்ளும் சக்தியை விரிவாக்கி, தன் சுய திறமையால் நிலை நிறுத்தும் திறன் உடையதாகக் கல்வி விளங்க வேண்டும்" என்பது சுவாமி விவேகானந்தரது வீர முழக்கம்.

இக்காலக் குழந்தைகளைப் பிற்கால மேன்மக்களாக, ஒழுக்க சீலர்களாக, சமூக அந்தஸ்து உள்ளவர்களாக, நாட்டுப்பற்று உடையவர்களாக, சிறந்த தலைவர்களாக உருவாக்கும் திறன் கொண்டது கல்வி. "Education is the Chief Defence of a Nation" (ஒரு நாட்டைப் பாதுகாக்கும் ஆயுதம் கல்வி என்பது ஓர் ஆங்கில முதுமொழி)

**எனவே, கல்விப் பணி என்பது மிகவும் கடினமான பணிகளில் ஒன்று. ஒரு தேசத்தின் வளர்ச்சி ஒரு வகுப்பறையிலிருந்து தொடங்குகிறது. இந்தக் கல்விப் பணியில் மிக மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள்.**

"Teaching is a Profession Not a Job" என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் செயலாற்றுவதற்கான சகல வளங்களையும் அவர்கள் தேடிக்கொள்ள வேண்டும்.

கல்வியில் மாணவர்கள் ஆசிரியர்கள் ஒத்துணர்வு, நல்விளக்கம், பரஸ்பர நம்பிக்கை மிக மிக முக்கியமானவை. ஆனால் அண்மைக்காலத்தில் ஆசிரியர் மாணவர் உறவு அநேகமாக எப்போதும் சர்ச்சைக்கு உள்ளாகும் ஒரு நிலையாக உள்ளது. இங்கு மாணவர்களை ஆசிரியருக்கு எதிராக, அல்லது ஆசிரியர்களை மாணவர்களுக்கு எதிராக நிறுத்தி வைத்தே குற்றம்

சாட்டப்படுகின்றது. ஆசிரியர் மாணவர் உறவு என்பது இன்றைய சமூக அமைப்பால் நிர்ணயமாகின்றது என்ற உண்மையை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆசிரிய மாணவர்கள் உறவின் விரிசலுக்கு இன்றைய கல்வி முறையும் காரணமாகலாம். சமூக நலனை விட தனிப்பட்ட நலன் சார்ந்த கல்வி முறை ஆசிரியர் மாணவர் உறவிலும் சுயநலமே பொதுவாகி விடுகின்றது.

எங்கள் ஆசிரியப் பெருமக்கள் இவற்றை உணர்ந்து எங்கள் குழந்தைகள் மனிதர்களாக, மனித நேயத்துடன் கூடியவர்களாக வளரக்கூடிய வகையில் அவர்களைப் பரிவுடன் விளங்கிக் கல்விப் புகட்டுதல் அவசியம்.

இன்றைய எங்கள் கல்வி முறையில் தனியார் கல்வி Tutory Education கடந்த சில வருடங்களில் ஒரு புற்று நோயாகி, அதுவே கல்விக்கு இடையூறு தருகிறது. இந்த வர்த்தகக் கல்வி முறை சுயநலக்கொள்கையைத் தேசிய மயமாக்கியுள்ளது. இது தனிப்பட்ட ஆசிரியரின் விருப்பு, வெறுப்பு சார்ந்த ஒன்றல்ல. சமூக அடிப்படை தான் இதை உருவாக்குகிறது. முன்னரை விட மிகக் குறைந்த எண்ணிக்கையிலான (Doctors, Engineers) வைத்திய நிபுணர்கள், பொறியியல் நிபுணர்கள் இடங்களைப் பிடிக்க பலர் கடுமையாகப் போராடுகின்றனர். இதனால் மனப்பாடக் கல்வி முறை மிகவும் கூர்மை அடைகிறது. மனப்பாட மூலமாக மாணவ கணனிகளை உருவாக்கும் சுயநலம் தனிப்பட்ட ஆசிரியர்கள் மூலமான கல்வி போதித்தல் வெற்றியின் இலட்சியமாகின்றது.

ஆசிரியர்கள் தனிப்பட்ட (Tutory) கல்வி நிலைய மாணவனை உருவாக்கப் பாடசாலையைப் பயன்படுத்துகின்றனர். இது இன்று இங்கு ஒரு நோயாகிவிட்டது. இதன் மூலம் ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பித்தல் என்பதைப் படிப்படியாகக் கைவிடு

கின்றனர். இதனால் பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் உறவில் மாற்றம் நிகழ்கின்றது. பாடசாலையில் ஆசிரியர் மாணவர் உறவு இதற்குள் மாறும் போது பணம் கொடுத்துக் கல்வி பெற முடியாத ஏழை மாணவர்கள் நிலை பரிதாபத்துக்கு உரியதாகிறது.

எங்கள் சரியான கல்வி என்பது எமது சமூக பொருளாதார தேவைக்குள்ளும் அதை வளர்த்தெடுப்பதை அடிப்படையாகவும் கொண்டிருக்க வேண்டும். கல்வி மக்களின் அடிப்படையான வாழ்வுடன் இணைந்ததாக உழைப்புடன் நெருக்கமானதாக இருக்க வேண்டும். சமுதாயம் உயர்ந்த உலகப் பண்புகளைக் கைக்கொள்ளும் முறையை நோக்கி எமது கல்வி முன்னேற வேண்டும். கல்வி கற்பித்தல், மீளக் கற்றல், வாசித்தல், விமர்சித்தல் என்று நடைமுறை வாழ்வு சார்ந்து ஆசிரிய மாணவர்கள் உறவு அமைய வேண்டும்.

ஆசிரியர்களே, மாணவர்கள் புரிந்துணர்வு மூலம்தான் வளமான கல்வியைப் பெற முடியும். மேற்குலகக் கல்விச் சிந்தனை யாளர்களில் ஒருவரான Mark Van Doren என்னும் அமெரிக்கரின் கூற்று The powers of the person are what education wishes to perfect. I believe we need to teach our students how to use their knowledge, their power. We certainly need citizens who are empowered to think critically and make moral decisions. We also need citizens to gain power by their employment. I believe that all pur suits of knowledge are important to the growth of the individual, but I also believe that we need to show students how to apply their knowledge to enhance their employable skills. Students need employable skills and society needs skilled workers.

"கல்வி மக்களின் சக்திகளை நிறைவாக்க விளைகிறது. எங்கள் மாணவர்களுக்கு அவர்கள் அறிவை எவ்வாறு

பயன்படுத்துவது, அவர் தம் ஆற்றலை எவ்வாறு உபயோகிப்பது என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். நிச்சயமாக எங்களுக்கு ஆக்கபூர்வமாக, ஆய்வு செய்து நீதி நியாயம் கொண்ட தீர்வுகளை எடுக்கக்கூடிய நல்ல அறிஞர்கள் வேண்டும். அதேபோல் தங்கள் தொழில் மூலம் சக்தி ஈட்டக்கூடிய மக்களும் எமக்கு வேண்டும். எல்லாவிதமான கல்வி முயற்சிகளும் ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்கு அவசியம் என்பது என் நம்பிக்கை. ஆனால் அதே சமயம் எங்கள் மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற அறிவை உபயோகித்து தங்கள் தொழில் திறமைகளை அதிகரிக்கலாம் என்பதைக் காட்ட வேண்டிய அவசியமும் எமக்கு உண்டு. மாணவர்கட்கு தொழிலில் பயன்படுத்தக்கூடிய திறமைகள் அவசியம். சமுதாயத்திற்குத் திறமை உள்ள உழைப்பாளிகள் அவசியம்.

**இந்த வகையில் எதிர்காலப் புதுப் பிரச்சினைகளை ஆயத்தம் செய்யும் சமூகத்தின் கர்த்தாக்களே ஆசிரியர்கள். ஆசிரியர்கள் அந்த சமூகத்தின் உட் செல்லும் வழியை மாணவர்கள் காண்பதற்கு உதவும் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.**

எனவே ஒரு நாட்டில், ஒரு சமூகத்தில் எவ்வகையிலும் கல்வி மிக முக்கியமான ஒன்று. இந்தக் கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் பணி போற்றப்பட வேண்டிய ஒன்று. நல்ல கல்வியை மாணவர்கள் பெறவும், அதை நல்ல முறையில் ஆசிரியர்கள் அவர்களுக்கு வழங்கவும், இருவரிடையேயும் ஒத்துணர்வு, நல் விளக்கம் ஏற்பட பின்வரும் குறிப்புக்களை ஆசிரியர்கள் பின்பற்றி இரு சாராரிடையேயும் நல் விளக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தலாம். (Tips for Rapport Building)

1. ஒவ்வொரு மாணவனையும் பெயர் சொல்லீ அழையுங்கள்.
2. உங்கள் மாணவர்களின் அபிலாஷைகள், பொழுது போக்குகள்,

ஆக்கங்கள் என்பன பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

3. பொருத்தமான உதாரணங்களை ஆக்கி உபயோகியுங்கள்.
4. வகுப்பிற்கு நேரம் முந்தி வந்து காலம் தாழ்த்தி இருந்து மாணவர்களுடன் உரையாடுங்கள்.
5. உங்கள் பாடக்கொள்கைகளை நன்கு விளக்குங்கள்.
6. ஒன்றிணைந்து செயற்படுங்கள்.
7. மாணவர்களது குறிப்புக்கள், வினாக்கள் ஆகியனவற்றைப் பாராட்டுங்கள்.
8. கற்பித்தலில் உற்சாகமும், உங்கள் பாடத்தில் ஆர்வமும் கொண்டிருங்கள்.
9. ஹாஸ்யஉணர்வை இடையிடையே கொள்வதன் மூலம் கற்பதை இலகுவாக்குங்கள்.
10. பணிவுடனும், தேவை ஏற்படின் நீங்கள் தாழ்மையுள்ளவராகவும் இருங்கள்.
11. மாணவர்களை அன்போடும், கனிவோடும், பாசத்தோடும் பாருங்கள்.
12. மாணவர்களைப் பண்புடன் நடத்துங்கள்.
13. புன் சிரிப்பை மறக்க வேண்டாம்.

மாணவர் கல்வி கற்பதன் மூலம் பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் பெற்று, நல்ல பதவியில் இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு கற்றால் வாழ்வில் வெற்றி பெறலாம். அதற்கு மாணவர்கள் செய்ய வேண்டியது.

1. கற்கும் போது ஆசிரியர் கற்பிப்பதை அவதானமாகக் கேட்டு கற்க வேண்டும்.
2. படிப்பது விளங்காவிடின் மீண்டும் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டும்.
3. அன்று படிக்கும் பாடங்களை அன்றே வீட்டில் மீண்டும் படிக்க வேண்டும்.
4. நேரசூசியின் படி படிக்க வேண்டும்.

5. படிக்கும் நேரங்களில் கவனத்தைத் திசை திருப்பாது படிக்க வேண்டும்.

6. தேவையற்ற வீணான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தவிர்த்தல்.

7. கையடக்கத் தொலைபேசியை கூடிய வரை தவிர்த்தல்.

8. படிக்கும் பாடங்களை சிறு குறிப்பெழுதிப் படிக்க வேண்டும்.

9. கடந்தகால வினாப்பத்திரங்களைச் செய்து பார்த்தல் வேண்டும்.

10. எந்நேரத்திலும் பரீட்சைக்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

11. பரீட்சையில் உரிய வினாக்களைக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும்.

12. தூக்கக் கலக்கத்தில் படிக்காதீர்கள். அதில் எவ்வித பயனும் இல்லை.

13. அதிகாலையில் விழித்தெழுந்து படியுங்கள். பூரண பயன் உண்டு.

14. ஏனைய தேவைகளை விட படிப்புக்கு அதிக நேரம் செலவிடுங்கள்.

இவற்றைக் கடைப்பிடித்தால் வாழ்வில் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று கூறிக்கொண்டு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோரையும் கொண்ட சமூகம் உயர்வு பெறுக என மனதார வாழ்த்தி அமைகின்றேன்.

**"வெல்லுக மகாஜன மாதா**

**வெல்லுக மகாஜன தலைவர்"**

**நன்றி**

**வணக்கம்**

**அன்புடன் த.பேரானந்தராசா**